https://arimanokku.com/ UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)
19-2 April 2025

Published on 14, April-2025 ISSN: 3049-2688 (Online)

# அம்மூவனார் பாடல்களில் மொழிநடை ஐங்குறுநூறு - நெய்தல்

**முனைவர் ஏ. மேரி நேசபிரியம்**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
சென்னைக் கிறித்தவக் கல்லூரி, தாம்பரம்-59

## முன்னுரை

மொழி மனிதனின் பரிணாம வளர்ச்சியில் பிறந்து பண்பாட்டில் முக்கிய பங்கு வகிக்கிறது மனிதநேய சமுதாயத்துடனும் அவன் வாழும் நிலம் சூழல் ஆகியவற்றுடன் இணைப்பது மொழியாகும் மொழியின் ஆற்றலும் பயனும் அளவிட முடியாதது ஒரு நாட்டின் கலாச்சாரம் மொழியை சார்ந்து காணப்படுகிறது. சொற்களின் கோவையை மொழி என்று கருதப்படுகிறது ஒரு பொருளை உணர்த்த சொற்கள் தொடர் அமைப்புகள் இலக்கண அமைதிகள் போன்றவைகள் காணப்படுகின்றன இந்த சொற்கொரு தேர்வு முறை புலவருக்கு புலவர் வேறுபட்டே காணப்படுகிறது இவ்வேறுபாடு அவரது நடையாக கருதப்படுகிறது ஒவ்வொரு எழுத்தாளனிடமும் அல்லது பாவல்களிடம் காணப்படும் தனிப் பண்புகளை நடை என்பது குறிப்பிடப்படுகிறது. இலக்கியம் என்பது மொழியே சங்க இலக்கியப் புலவரான அம்முவனாரின் ஐங்குறுநூறில் உள்ள நெய்தல் திணை பாடல்கள் மட்டுமே ஆய்வுக்கு உட்படுத்தப்படுகிறது மொழிநடை பண்பும் மொழிக்கே உரிய பொதுவான மற்றும் தனித்து நடைபெற்ற பண்புகள் இவ்வாய்வின் மூலம் வெளிப்படுத்தப்படுகிறது அம்மோனாரின் மொழிநடையை தொல்லியல் மூலமாக பகுதாராய்ந்து அவரின் தனித்த மொழி நடைப்பாங்கு அடையாளப்படுத்தப்படுகிறது.

## திறவுச்சொற்கள்

ஞாழல், கண்டிகுமோ, அல்லமோ, கொண்க, கையறுபு, இழிபு, ஊர்பு

## அம்மூவனார்

அம்மூவனார் சங்க காலப் புலவர்களில் ஒருவராக மூவன் என்பது இவரின் இயற்பெயராக கருதப்படுகிறது இவர் 127 சங்கப்பாடல்களில் பாடியுள்ளார் சேரன் பாண்டியன் மலையமான் போன்றோரால் ஆதரிக்கப்பட்டுள்ளார் தொண்டி மாந்தை கொற்கை கோவலூர் ஆகியவற்றை வியந்து பாடியதாக கூறப்படுகிறது இவர் ஐங்குறுநூறில் நெய்தல் திணையில் 100 பாடல்களை பாடியுள்ளார்.தாய்க்கு உரைத்த பத்து தோழிக்கு உரைத்த 10 கிழவர்க் குறைத்த 10 பாணர் குறைத்த 10 நாளில் 10 வெள்ளாங்குருக்கு 10 சிறுவெண் காக்கை 10 தொண்டி பத்து நெய்தல் பத்து வலை பத்து ஐங்குறுநூற்றுப் பாடல்களை சுறுசுறுக்கமாக கையாண்டு கவிதைகளை பாடியுள்ளார் நெய்தல் திணை சார்ந்த முதல் உறுபொருட்களை பெரிதும் பாடல்களில் பயன்படுத்திய புலவராக அம்மூவனார் விளங்குகிறார்.

## பெயர்ச்சொல்

பெயர்ச்சொல் வேற்றுமை உருபுகளையும் பெயரடைகளையும் ஒன்றி வரும் எழுவா யாகத் தோன்றும் சொற்களைப் பெயர் என்று கருதுகிறோம் எழுவாயகத் தோன்றுக் கூடிய

பெயர்ச்சொற்கள். அனைத்து இலக்கியப் மொழிகளில் காணப்படும். அம் மூவனாரும் இத்தகைய எழுவாய் அமைப் பினைத் தம் பாடல்களில் கையாண்டு ள்ளதை அறியமுடிகிறது.

எக்கர் *(180:1)*

அணங்கு *(174:1)* நெய்தல் *(181:1)* குறும்பொறை *(183:1)* நாரை *(186:1)*

புன்னை *(189:1)*

## விளிப்பெயர்

படரக்கையோரை தம்முகமாக அழைப்பதை விளி என்கிறோம்.

கொண்க *(121-1,122-1,)*
பாண *(131-1,132-1,133-1,134-1,135-1,136-1,137-1,138-1,139-1,140-1)*
தோழி *(142-3)*
சேர்ப்ப *(159-3)*
துறைவ *(160-3)*
பெரும *(160-5)*
தோழி *(169-5)*
நெஞ்சே *(172-1)*
சேர்ப்ப *(179-1)*
அம்ம *(181-5)*
துறைவ *(186-2)*
தோழி *(192-4)*
வளையே *(192-4)*
நாடே *(199-4)*

தலைவிக்கு வாயிலாகும் பாணனை நோக்கி கூறுவதாக அமைந்தது பாணற்கு உரைத்த பத்து. தலைவன் தலைவியை பிரிந்த போது தலைவி பாணனை விளித்து பாணனே என் அவல நிலையை நீ காண வேண்டும் என்றும் என் உடல் மெலிவிற்கு தலைவனே காரணம் என்று கூறுகிறார். பாணற்கு உரைத்த பத்தில் தலைவன் பரத்தையரை நோக்கிச் செல்லும் போது தலைவி பாணனை விளித்துக் கூறுவதால் அம்மூவன் பாண! என்ற விளிப்பெயரைப் பயன் படுத்தியுள்ளதை அறிய முடிகிறது.

## சுட்டுப்பெயர்

சுட்டுச்சொற்களுள் பெயராக வருபவற்றைச் சுட்டு பெயர் என்று குறிப்பிடுகின்றோம் அவன், இவன் எனவும் அவள், இவள் எனவும் அவர், இவர் எனவும் அது. இது எனவும் அவை, இவை எனவும் வருவன சுட்டுப் பெயர்களாகும் .

உதுக்காண் *(101-1)*
இவ் ஊர் *(131-2)*
இவ் ஊரே ! *(138-1)*
ஆங்கண் *(172-2) (181-5)*
இவ் *(181-5)*
இத்துறை *(186-3)*
அவ் *(194-1)*
அது *(194-1)*
அவ்வளை *(185-3)*
இவையே *(187-1)*

அகர, இகர, உகர சுட்டுக்களை அம்மூவன் பயன்படுத்தி உள்ளதை அறிய முடிகிறது. அகர, இகர சுட்டுக்கள் மட்டுமே பெரும் பாலும் மொழியில் அமைந்து வரும்.ஆனால் உகரச்சுட்டு செய்யுளில் பயின்று வருவது குறைவு உகர சுட்டினை அம்மூவன் பயன் படுத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்க தாகும்.

உதுக்காண் *(ஐங் 101:1)*

## பெயரெச்சம்

பெயரினை எஞ்சு கிளவியாக உடைய எச்சம் பெயரெச்சம் ஆகும். இதனைத் தொல்காப்பியர் பெயரெஞ்சு கிளவி என்ற கலைச்சொல்லால் குறிப்பிடுகிறார் .

இசைக்கும் *(102)* இலங்கும் *(106-4)*
வரிக்கும் *(117-3)*
சேக்கும் *(157-3)*
கொட்டும் *(158-4)*
தங்கும் *(161-2)* சேக்கும் *(162-2)* ஆரும் *(164-2)*
மாந்தும் *(165-2)* ஆரும் *(167-2)*
ஈனும் *(168-2)*
சேக்கும் *(169-3)* பசக்கும் *(169-5)* சிதைக்கும் *(170-2)*
இசைக்கும் *(173-3)*
நாறும் *(173-3)* திளைக்கும் *(177-2)*
கமழும் *(177-3)*
பிறழும் *(179-3)*
கமழும் *(182-2)*
உளரும் *(186-2)*
ஆரூம் *(188-1)*
தோன்றும் *(189-2)*
அறுக்கும் *(190-2)*
உகைக்கும் *(192-2)*
இமைக்கும் *(193-2)*
பகரும் *(195-1)*
திளைக்கும் *(199-1)*

'செய்யும்' என்னும் வாய்ப்பாட்டு எதிர்கால பெயர்ச்சத்தை மிகுதியும் கையாண்டுள்ள

போக்கு அம்மூவனாரின் பாடல்களில் சிறப்பு கூறாகக் கருதப்படுகிறது. வரையும் என்று தலைவன் பரத்தையே இற்பரத்தையை வரைந்து கொள்வான் என்றும் பூக்கும் என்பது புன்னையோடு ஞாழலும் பூத்து மணம் பரப்பும் குளிர்ந்த தன்மையுடையது, மிதிக்கும் என்பது குளிர்ந்த கடலில் பிறந்த வளையினைத் தன் பெடை என்று கருதி அதனைப் புணர முயலும் என்ற வகையில் செய்யும் எனும் வாய்ப்பாட்டு எதிர்கால பெயரெச்சங்கள் இடம் பெறுகின்றன.

### பெயரடை

பெயருக்கு அடையாக வருபவை பெயரடை யாகும். தெரிநிலை பெயரெச்சமும் குறிப்பு பெயரெச்சமும் சில உரிச்சொற்களும் பெயர் கள் அடையாக வருகின்றன.

பெருங்கடல் (102-2) ஒண் தழை (147-2)
தண் தழை (147-3) கருங்கோடு (161-2)
இருங்கழி (162-2) இருங்கழி (163-2) இருங்கழி (164-2) அறுகழி(165-2) சிறுமின்(165-2) இருங்கழி (167-2) இருங்கழி(170-2) ஒண் தொடி (172-1) இருங் கூந்தல் (173-4) நெடுங்கோடு (177-2) பணைத்தோள் (181-1) வெண் மணல் (181-3) பெருந்துறை (182-4) தண்கடல்(183-3) கொடுங்கழி (183-5) இருங்கழி (184-1) இருங்கழி (188-1) பெருந்துறை (188-2) நுண்தாது (189-1)
வெண் நெல்(190-1) கடற்கோடு(191-1)
கடற்கோடு (194-1) ஒண் தொடி (194-2)
நல் நுதல் (194-3) அருந் துயரம் (195-3)
தண் கடல் (196-4) குறுந்துறை (198-3)
நெடுந்தோள் (198-4) பெருந்துறை (199-1)
பொலந்தேர் (200-2) நெடுங்கண் (200-3)

### வினையெச்சம்

வினைச்சொல்லைக் கொண்டு முடிகின்ற எச்சச் சொல் வினையெச்சம் எனப்படுகிறது. வினையெச்சம் இருதிணை ஐம்பால் மூவிடங்களுக்கும் பொதுவாக அமையும் தன்மை உடையது

**செய்து செய்யூச் செய்தென**
**செய்யியர் செய்யிய செயின் செய செயற்கு என**
**அவ் வகை ஒன்பதும் வினை எஞ்சு கிளவி**
(தொல். சொல் 713 நூற்பா)

தொல்காப்பிர் குறிப்பிடும் வினையெச்ச வாய்பாடுகளில் சில இப்பாடல்களில் விரவி வருகின்றன.

ஊர்பு (101-2)
இழிபு (101-2)
சாஅய் (104-2)
சாஅய் (107-1)
செய்த (143 - 1,2)
செத்தென (151-1) காணிய (151-2)
கையறுபு (152-1)
பதைப்ப(156-3)
ஒழிந்த (156-3)
அளைஇ (171-1)
விரைஇ (182-1)
இன்புற (102-3)
வந்தென (105-3)
வீழ்ந்தென (122-2) பிரிந்தென (132-2)
பிரிந்தென (140-2) பிரிந்தென (183-3) வந்தென (189-3) பிரிந்தென (192-3) செய்தென (194-3)

### வினைத்தொகை

வினைத்தொகை என்பது ஒரு வினைச் சொல்லும் ஒரு பெயர்ச்சொல்லும் இணைந்த கூட்டுச்சொற்களாகும். முதல் சொல் வினைச் சொல்லாகவும் இரண்டாம் சொல் பெயர்ச் சொல்லாகவும் இடம்பெறும் தன்மையுடை யது. முன்வரும் வினைச்சொல் மூன்று காலத்தையும் குறிப்பால் உணர்த்தும் சொல்லாக அமையும் பண்புடையது.

முழங்குகடல் (105 - 1) தருமுத்தம் (105 - 2)
சூழ்கழி (111-2) அடைகரை (115 - 2)
பாய்பரி (134-2) இலங்குவளை (136 - 1 )
இறங்கு இணர் (142 - 1) பொங்கு அரி (174-3)
பொங்கு கழி (186-3) அடைகரை (193 - 1)
இலங்குகதிர் (193-2) செறிவளை (199-4)
எறிகடல் (199-4)

### வினைமுற்று

தொடர்பொருள் முற்றி நிற்கின்ற வினை யினை வினைமுற்று என்று குறிப்பிடுகிறோம். இந்த வினைமுற்று தெரிநிலை வினைமுற்று குறிப்பு வினைமுற்று என இருவகைப்படும்.

சிவந்தன்று (105-4) கண்டிசின் (105-4)
கண்டிசின் (106-4) நோகோ (107-4)
மறந்தோம் (112-2) செல்குவம் (114-2)
நின்றோனே (115-4) வந்தன்று (116-4)
சினவுவென் (118-3) தகைக்குவென் (118-3)
சென்றனென் (118-3) கண்டிகும் ( 121-1)
வினவுவோளே (122-3) கண்டிகும் (123-1)
பார்பவோளே (123-3) கண்டிகும் (124-1)
தூர்ப்பாளே (124-4) நின்றோளே (125-3)
மூழ்குவோளே (126-3)விலங்குவோளே (127—3)

ஊட்டுவோளே (128-3) காண்மதி (134)
வந்தன்று (134) உகுப்பபோய் (136-1)
வினவுவல் ( 137-1) பெறுபவோ (137-3)
சிதைக்குமே (139-1) காண்மதி (140-1)
உள்ளேன் (142-3) முயங்குமதி (148-3)
வல்லாதீம் (148-3) கண்டிகும் (158-4)
இரக்குவென் (159-4) சென்மோ (159-5)
முயங்குமதி (160-2) நல்கினள் (174-2)
வந்திசின் (175-3) கூறுமதி (176-1)
நல்குமதி (179-1) கொண்மோ (180-1)
வருதி (183-3) செல்லாதீம் (186-5)
அரியள் (191-4) ஒளித்தோளே (191-5)
நெகிழ்ந்தன (192-3) கண்டிகும் (194-2)
கடுத்தனள் (194-4) வெளவியோளே (195-4)
கொண்மோ (196-4) நின்றோளே (197-2)
நல்குவள் (197-4) கண்டிகும் (198-5)
காண்கம் (199-3) வம்மோ (199-4)
வந்தனன் (200-2) ஞெகிழ்மதி (200-3)
நகுகம் (200-4)

## இடைச்சொல்

கொல் (108-4) மற்று ( 108-4) கொல் ((09-3) மன்ற (112-3) கொல்லோ (114-2) அன்ன(116-2) மன்ற (119-3) அம்ம(132) மன்ற (136-1) மற்றே (137-3) மன்ற (138-1) மன்ற (146-3) அன்ன (149-1) மன்றே (153) மற்று (170-4) அன்ன (171-3) போல (172-3) அன்ன (174-1) அன்ன (175) மன்ற (177-1) அன்ன (178-3) அற்று (179-1) அன்ன (180-4) கடுப்ப (186 - 1)

மன்ற என் கிளவி தேற்றம் செய்யும் (சொல் . இடை. 265) மன்ற என்னும் இடைச் சொல் தேற்றம் எனப்படும் தெளிவுப் பொருளைக் குறித்து வரும். இனிய மன்ற என் மாமமை கவினே (ஐங் 146.3) களவு நீட்டித்த பொழுது தோழி தலைவனை நோக்கி விரைவாய் தலைவியை மணமுடிக்குமாறு வற்புறுத்து கிறாள். தலைவன் விரைவில் திருமணம் செய்யாமல் இருந்த தால், தலைவன் மீது ஐயத்துடன் காணப் படுகிறாள். பின்னர் தலைவன் திருமணம் செய்து கொள்வான் என்று தெளிவாகக் கூறுகிறாள்.

கொல்லே ஐயம் (தொல். இடை. 268) கொல் என்னும் இடைச்சொல் ஐயப்பொருளை உணர்த்துவதற்கு வரும். தோழியிடம் தலைவி தலைவனை நாம் இங்கு காண முடியவில்லை எனவே மடல்களை உடைய அழகிய பனை மரங்கள் கொண்ட அவனுடைய நாட்டிற்கு நாம் செல்வோமா? என்று ஐயத்துடன் தோழியிடம் கூறுவதை 'கொல்' என்ற ஐயப்பொருள் தரக்கூடிய இடைச்சொல் இங்கு பயன்படுத்தப் பட்டுள்ளது. நேரம் ஆயினும், செல்குவம் கொல்லோ ஐங். (114-2)

## முடிவுரை

அம்மூவனார் பாடல்களில் பொதுவான மொழிநடைப் பண்பும் தனித்த மொழி நடைப் போக்கினையும் அறிய முடிகிறது. பெயர், சுட்டுப் பெயர், விளிப் பெயர், வினைத்தொகை, வினையெச்சம், வினை முற்று, போன்ற சொற்கூறுகள் பொதுவான மொழிநடை பண்பாகக் காணப்படுகிறது. வினைமுற்றுக்களை கையாளும்போது முன்னிலை அசைச்சொற்களைத் தனக்கான தனித்த மொழிநடையாகக் கையாண்டுள்ள போக்கு வெளிப்படுகிறது. முன்னிலைசை சொற்களில் மோ, மதி, இகும், சின் ஆகிய அசைகளைத் தம் பாடல்களில் அதிகமாக பயன்படுத்தியுள்ளார். மேலும் கொல், மன்ற, அன்ன, போல என்ற இடைச் சொற்களை யும் அம்மூவன் கையாண்டுள்ளார். இடைச் சொற்களை பயன்படுத்துவதின் மூலம் அம்மூவனாரின் தனித்த மொழி நடைப் பண்பினை அறிய முடிகிறது.

## துணைநூற் பட்டியல்

1. ஐங்குறுநூறு (2014) (மூலமும் உரையும்) நியூ செஞ்சரி புக் ஹவுஸ், இராயப் பேட்டை சென்னை.
2. முனைவர் சுபாஷ் சந்திரபோஸ் (2015) (உ.ஆ) தொல்காப்பியம்-சொல்லதிகாரம், இயல் வெளியீடு, தஞ்சாவூர்.
3. தமிழண்ணல் (2014) மீனாட்சி பதிப்பகம் மதுரை.
4. செ.வை.சண்முகம் (2002) கவிதைக் கட்டமைப்பு, மெய்யப்பன் பதிப்பகம், 31 சிங்கர் தெரு பாரிமுனை சென்னை.
5. முனைவர் ப. டேவிட் பிரபாகர் (2004) தமிழ் மொழி அறிமுகம், விவி வெளியீடு, 319, ஔவையார் தெரு, இராசக்கீழ் பாக்கம், சென்னை.
6. முனைவர் மு.வரதராசன் (2017) மொழிவரலாறு, பாரிநிலையம், பாரி முனை, சென்னை.
7. மோ. இசரேயேல் (1976) இடையும் உரியும், மதுரைப் பல்கலைக்கழகம், மதுரை
8. முனைவர் ச.சுபாஷ் சந்திர போஸ் மொழியில் நோக்கில் சொல்லியல், (2018) NCBH, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர் சென்னை-98
9. பேராசிரியர் சு. அழகேசன் இலக்கிய மொழி (2017) காவ்யா வெளியீடு 16, இரண்டாம் குறுக்குத் தெரு, டிரஸ்ட் புரம், கோடம்பாக்கம், சென்னை- 024.